Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurall@gmail.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact :
98413 59935

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | செவ்வாய், ஜனவரி 21, 2025 | இதழ் 283

## விண்வெளி துறையில் இந்தியா அபார வளர்ச்சி

# விண்வெளியில் தாவரங்கள்: இஸ்ரோ விஞ்ஞானிகளுக்கு பாராட்டு

## 'மன் கி பாத்' நிகழ்ச்சியில் பிரதமர் மோடி பெருமிதம்

சென்னை, 21 ஜனவரி 2025: விண்வெளியில் தாவரங்களை வளர செய்வதற்கான முயற்சியில் ஈடுபடும் இஸ்ரோ விஞ்ஞானிகள் வருங்காலத்திற்கான தொலைநோக்கு பார்வையுடன் செயல்படுகின்றனர் என பிரதமர் மோடி பாராட்டு தெரிவித்தார்.

விண்வெளி துறையில் இந்தியா அபார வளர்ச்சி அடைந்துள்ளது என்றும் அவர் பெருமிதத்துடன் கூறினார்.

ரேடியோ வாயிலாக பிரதமரின் 'மன் கி பாத்' நிகழ்ச்சி கடந்த 2014ம் ஆண்டு அக்டோபர் 3ம் தேதி துவக்கப்பட்டது. ஒவ்வொரு மாதம் கடைசி ஞாயிற்றுக்கிழமை 'மன் கி பாத்' நிகழ்ச்சி மூலம் பிரதமர் மோடி மக்களுடன் உரையாடி வருகிறார். வரும் ஜனவரி 26ம் தேதி குடியரசுத்தினம் என்பதால், முன்னதாகவே, 2025ம் ஆண்டின் முதல் மன் கி பாத் நிகழ்ச்சியில் பிரதமர் மோடி பேசினார்.

அதில் அவர் பேசியதாவது:

நீங்கள் ஒரு விஷயம்



கவனித்து இருப்பீர்கள். மாதத்தின் கடைசி ஞாயிறன்று மன் கி பாத் நடைபெறும். ஆனால் இந்த முறை, 4-வது வாரத்திற்கு பதிலாக, ஒரு வாரத்திற்கு முன்பே, மாதத்தின் 3-வது வாரத்தில் நாம் சந்திக்கிறோம். ஏனெனில், அடுத்த ஞாயிற்று கிழமை குடியரசு தினம் வருகிறது. நாட்டு மக்கள் அனைவருக்கும் குடியரசு தின வாழ்த்துகளை நான் முன்பே தெரிவித்து கொள்கிறேன்.

இந்த குடியரசு தினம் சிறப்பு வாய்ந்தது. இந்திய குடியரசின் 75-வது ஆண்டு தினம் இதுவாகும். நாட்டின் அரசியல் சாசனம் அமல்படுத்தப்பட்டு 75-வது ஆண்டை இந்த வருடம் குறிக்கிறது. நமக்கு புனித அரசியலமைப்பை வழங்கிய அரசியலமைப்பு உறுப்பினர்களான சிறந்த தலைவர்கள் அனைவருக்கும் தலைகுனிந்து என்னுடைய வணக்கங்களை தெரிவித்து கொள்கிறேன்.

இஸ்ரோ விஞ்ஞானிகள் வியத்தகு சாதனைகளை செய்து வருகின்றனர். விண்வெளி ஆராய்ச்சியில் எதிர்கால சவால்களுக்கு இந்திய விஞ்ஞானிகள் தீர்வுகளை வழங்கி வருகிறார்கள். விண்வெளி துறையில் இந்தியா அபார வளர்ச்சி அடைந்துள்ளது.

நமது விஞ்ஞானிகள் விண்வெளியில் தாவரங்களை வளர்த்து அவற்றை உயிர்ப்புடன் வைத்திருக்க முயற்சிக்கின்றனர். டிசம்பர் 30ம் தேதி அன்று விண்வெளிக்கு அனுப்பப்பட்ட காராமணி விதைகள் விண்வெளியில் முளைத்துள்ளன. எதிர்காலத்தில் விண்வெளியில் காய்கறிகளை வளர்ப்பதற்கான வழிகளை உருவாக்கும். நமது விஞ்ஞானிகள் எதிர்காலத்திற்கான தொலைநோக்குப் பார்வையுடன் செயல்படுகிறார்கள்.

மகா கும்பமேளா நிகழ்ச்சி கோலாகலமாக துவங்கி உள்ளது. இந்த நிகழ்ச்சியில் ஏராளமான இளைஞர்கள் பங்கேற்று வருகின்றனர். இது நமது பாரம்பரியத்தை வலுப்படுத்தும். பொன்னான எதிர்காலத்தை உறுதி செய்யும். இது வேற்றுமையில் ஒற்றுமையைக் கொண்டாடுகிறது. உலகெங்கிலும் உள்ள மக்கள் கும்பமேளா நிகழ்ச்சி நடக்கும் இடத்தில் கூடுகிறார்கள்.

ஏழை யோ பணக்காரனோ அனைவரும் ஒன்றுதான். அவர்கள் ஒன்றாக அமர்ந்து சாப்பிடுகிறார்கள். இது தெற்கிலிருந்து வடக்கு வரை ஒன்றிணைகிறது. சங்கராந்தி அன்று உலகம் முழுவதிலுமிருந்து மக்கள் இங்கு கலந்து கொண்டனர். வளர்ச்சிப் பாதையில் செல்லும் போது நமது பாரம்பரியத்தை பாதுகாக்க வேண்டும். நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்.

ஜனவரி 25ம் தேதி தேசிய வாக்காளர் தினம் கொண்டாடப்பட உள்ளது.

இவ்வாறு பிரதமர் மோடி பேசினார்.


## கோ கோ உலகக் கோப்பையை வென்ற இந்திய மகளிர் அணிக்கு பிரதமர் பாராட்டு

சென்னை, 21 ஜனவரி 2025: முதலாவது கோ கோ உலகக் கோப்பையை வென்ற இந்திய மகளிர் அணிக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

சமூக ஊடக எக்ஸ் தளத்தில் அவர் கூறியுள்ளதாவது:

"முதலாவது கோ கோ உலகக் கோப்பையை வென்ற இந்திய மகளிர் அணிக்கு வாழ்த்துகள். இந்த வரலாற்று வெற்றி, அவர்களின் இணையற்ற திறமை, உறுதிப்பாடு மற்றும் கூட்டு முயற்சியினால் ஏற்பட்டதாகும்.

இந்த வெற்றியானது இந்தியாவின் பழமையான பாரம்பரிய விளையாட்டுகளில் ஒன்றின் மீது அதிக கவனத்தை ஈர்த்துள்ளது. நாடு



முழுவதும் எண்ணற்ற இளம் விளையாட்டு வீரர்களுக்கு உத்வேகம் அளித்துள்ளது. இந்த சாதனை, வரும் காலங்களில் அதிகமான இளைஞர்கள் இந்த விளையாட்டைத் தொடர வழி வகுக்கும்."

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

## தேசிய பேரிடர் மீட்புப் படையின் நிறுவன தினத்தை முன்னிட்டு அதன் துணிச்சலான பணியாளர்களுக்குப் பிரதமர் மரியாதை

சென்னை, 21 ஜனவரி 2025: தேசிய பேரிடர் மீட்புப் படையின் துணிச்சலான பணியாளர்களின் தைரியம், அர்ப்பணிப்பு, தன்னலமற்ற சேவையைப் பாராட்டியுள்ள பிரதமர் திரு நரேந்திர மோடி, 19.01.2025 அன்று அதன் நிறுவன தினத்தை முன்னிட்டு வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து சமூக ஊடக எக்ஸ் தளத்தில் பிரதமர் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது:

"தேசிய பேரிடர் மீட்புப் படையின் (என்டிஆர்எஃப்) நிறுவன நாளின் இந்த சிறப்பு வாய்ந்த



சந்தர்ப்பத்தில், துன்பமான காலங்களில் கேடயமாக இருக்கும் துணிச்சலான பணியாளர்களின் தைரியம், அர்ப்பணிப்பு, தன்னலமற்ற சேவைக்கு நாம் மரியாதை செலுத்துகிறோம். உயிர்களைக் காப்பாற்றுவதிலும், பேரிடர்களின் போது உதவுவதிலும், அவசர காலங்களில் பாதுகாப்பை உறுதி செய்வதிலும் அவர்களின் அசைக்க முடியாத அர்ப்பணிப்பு உண்மையிலேயே பாராட்டத்தக்கது. பேரிடர் மீட்பு, மேலாண்மை ஆகியவற்றில் தேசிய பேரிடர் மீட்புப் படை உலகத் தரத்தை அமைத்துள்ளது.

## சென்னை ஐஐடி, 'விளையாட்டில் சிறந்து விளங்குவோருக்கான மாணவர் சேர்க்கை'யின் கீழ் ஐந்து தேசியத் தடகள வீரர் - வீராங்கனைகளைச் சேர்த்துள்ளது

சென்னை, 21 ஜனவரி 2025: சென்னையில் உள்ள இந்திய தொழில்நுட்பக் கழகம் (ஐஐடி மெட்ராஸ்), 'விளையாட்டில் சிறந்து விளங்குவோருக்கான மாணவர் சேர்க்கை' பிரிவின் கீழ் தேசிய அளவில் சாதனை படைத்த ஐந்து தடகள வீரர் - வீராங்கனைகளுக்கு அனுமதி அளித்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ், உள்நாட்டைச் சேர்ந்தவர்களுக்கு ஒவ்வொரு இளங்கலைப் பட்டப்படிப்பு பாடத்திட்டத்திலும் தலா இரண்டு இடங்கள் கூடுதலாக ஒதுக்கப்படுகின்றன. இதில் ஒரு இடம் மாணவிகளுக்கு மட்டும் ஒதுக்கப்படும்.

நாட்டிலேயே முதன்முறையாக விளையாட்டு வீரர்களுக்கான மாணவர் சேர்க்கையை தனது இளங்கலைப் படிப்புகளில் அறிமுகப்படுத்திய பெருமை சென்னை ஐஐடி-க்கு உண்டு. விளையாட்டில் சிறந்து விளங்கும் திறமையான மாணவர்களை அங்கீகரித்து வெகுமதி அளிப்பதே இந்த முயற்சியின் நோக்கமாகும். தகுதியான மாணவர்கள் தங்கள் விளையாட்டுகளில்




தொடர்ந்து சிறந்து விளங்கும் அதே வேளையில் உயர்கல்வியைத் தொடர இத்திட்டம் ஊக்குவிக்கிறது.

தேசிய அளவில் சாதனை படைத்து இக்கல்வி நிறுவனத்தில் சேர்ந்துள்ள ஐந்து விளையாட்டு வீரர்-வீராங்கனைகளை வரவேற்றுப் பேசிய சென்னை ஐஐடி இயக்குநர் பேராசிரியர் வி.காமகோடி, "விளையாட்டுக்கான சிறப்பு மாணவர் சேர்க்கை என்பது இளம்குழந்தைகளை சிறு வயதிலேயே விளையாட ஊக்குவித்தல் அவசியம் என்ற முக்கிய செய்தியைத் தெரிவிக்கும் ஐஐடி மெட்ராஸின் முன்முயற்சியாகும் என்றும், சம்பந்தப்பட்ட அனைவரையும் இது சென்றடையும் என நான் மனதார நம்புகிறேன்" என்றும் தெரிவித்தார்.

2024-25-ம் கல்வியாண்டில் 'விளையாட்டு வீரர்களுக்கான சிறப்பு சேர்க்கை' பிரிவின் கீழ் அனுமதிக்கப்பட்ட ஐந்து விளையாட்டு வீரர்-வீராங்கனைகள்:

மகாராஷ்டிராவைச் சேர்ந்த செல்வி அரோஹி பாவே (கைப்பந்து வீராங்கனை) - பி.எஸ் (மருத்துவ அறிவியல் மற்றும் பொறியியல்) படிப்பில் சேர்க்கப்பட்டார்

மேற்கு வங்கத்தைச் சேர்ந்த திரு ஆர்யமான் மண்டல் (வாட்டர் போலோ-நீச்சல் வீரர்) - பி.டெக் (கணினி அறிவியல் மற்றும் பொறியியல்) படிப்பில் சேர்க்கப்பட்டார்

தில்லியைச் சேர்ந்த செல்வி நந்தினி ஜெயின் (ஸ்குவாஷ் வீராங்கனை) - பி.டெக் (கணினி அறிவியல் மற்றும் பொறியியல்) படிப்பில் சேர்க்கப்பட்டார்

தில்லியைச் சேர்ந்த திரு பிரபாவ் குப்தா (டேபிள் டென்னிஸ் வீரர்) - பி.டெக் (செயற்கை நுண்ணறிவு மற்றும் தரவு அறிவியல்) படிப்பில் சேர்க்கப்பட்டார்

ஆந்திராவைச் சேர்ந்த திரு வங்கலா வேதவச்சன் ரெட்டி (டென்னிஸ் வீரர்) - பி.டெக் (செயற்கை நுண்ணறிவு மற்றும் தரவு அறிவியல்) படிப்பில் சேர்க்கப்பட்டார்.

# மூடநம்பிக்கையைப் பரப்பும் சென்னை ஐஐடி இயக்குநர் மநீம மாணவர் அணி கண்டனம்!

சென்னை, 21 ஜனவரி 2025: அறிவியல், தொழில்நுட்பம், விண்வெளி ஆராய்ச்சி உள்ளிட்டவற்றில் இந்தியா பெரும் வளர்ச்சி அடைந்துள்ள சூழலில், மாட்டு கோமியம் குடித்தால் மருத்துவ நன்மைகள் கிடைக்கும் என்பது போன்ற மூடநம்பிக்கைக் கருத்துகளும் பரப்பப்படுவது கடும் கண்டனத்திற்குரியது. இதுபோன்ற கட்டமைக்கப்பட்ட பொய்ப் பிரச்சாரங்களை எளிதாக கடந்துபோக முடியாது.

குறிப்பாக, அறிவியலையும், தொழில்நுட்பத்தையும் மாணவர்களுக்குப் பயிற்றுவிக்கும் கல்வி நிறுவனத்தின் தலைமைப் பொறுப்பில் இருப்பவர், இதுபோன்ற அறிவியலுக்கு எதிரான கருத்துகளைப் பரப்பி, சாதாரண மக்களை அதை நம்பச் செய்ய வைப்பது மிகவும் ஆபத்தானது.

மாட்டுப் பொங்கலையொட்டி சென்னை மேற்கு மாம்பலத்தில் உள்ள கோசாலையில் நடைபெற்ற நிகழ்வில் பங்கேற்ற சென்னை ஐஐடி இயக்குநர் திரு. காமகோடி அவர்கள், உடலில் பிரச்னைகளை ஏற்படுத்தும் பாக்டீரியா மற்றும் பூஞ்சைகளை அழிக்கும் சக்தி மாட்டு கோமியத்தில் உள்ளது என்றும், கோமியம் குடித்தால் காய்ச்சல் குணமாகும், அஜீரணக் கோளாறு சரியாகும் என்றும் பிற்போக்குத்தனமான கருத்துகளைத் தெரிவித்துள்ளார்.




பசுவின் கோமியத்தைப் பருகுவதால் உடல் நலத்துக்கு தீங்கு ஏற்படும் என்று மருத்துவர்கள் தெரிவித்துவரும் நிலையில் கோமியம் குடிப்பதை ஆதரிப்பது எந்த வகையிலும் ஏற்கத்தக்கதல்ல. அறிவியலால் அங்கீகரிக்கப்படாத விஷயத்தை ஒரு கல்வியாளர் பொதுவெளியில் பேசியிருப்பது விஷமத்தனமானது.

அறிவியல், தொழில்நுட்பத் துறையைச் சேர்ந்தவர்கள், தங்களது கருத்துகள் மக்களிடம் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை உணர்ந்து, பொறுப்புணர்வுடன் செயல்பட வேண்டியது அவசியம். மேலும், இதுபோன்ற கருத்துகள், கல்வி நிறுவனங்களின் அறிவுச் செயல்பாட்டையே கேள்விக்குறியாக்கும்.

மூடநம்பிக்கை என்பதைத் தாண்டி, கோமாரி, ஆந்த்ராக்ஸ் போன்ற நோய்களால் பாதிக்கப்பட்டிருக்கும் மாட்டின் கோமியத்தைக் குடிப்பது உடல்நலத்துக்கு ஆபத்தை ஏற்படுத்தும் அபாயமும் உண்டு. போலி அறிவியல் கருத்துகளை ஐஐடி இயக்குநரே பரப்புவது வேதனைக்குரியது மட்டுமின்றி, கடும் கண்டனத்திற்குரியது. அவர் தனது கருத்தை உடனடியாக திரும்பப் பெற வேண்டுமென மக்கள் நீதி மய்யத்தின் மாணவர் அணி வலியுறுத்துகிறது.

# நடிகை தேவயானி முதன்முறையாக இயக்கி தயாரித்துள்ள குறும்படம் 'கைக்குட்டை ராணி' ஜெய்ப்பூர் சர்வதேச திரைப்பட விழாவில் விருதை வென்றது

## இசைஞானி இளையராஜா இசையில் பி. லெனின் படத்தொகுப்பில் உருவாகியுள்ள 'கைக்குட்டை ராணி'' குழந்தைகளின் உணர்வுகளை பேசுகிறது

சென்னை, 21 ஜனவரி 2025: திரையுலகில் கடந்த 30 ஆண்டுகளில் பல்வேறு மொழிகளில் சுமார் 100 படங்களில் நடித்துள்ள நடிகை தேவயானி முதன்முறையாக இயக்கி தயாரித்துள்ள குறும்படமான□ 'கைக்குட்டை ராணி' 17வது ஜெய்ப்பூர் சர்வதேச திரைபப்ட விழாவில் சிறந்த குழந்தைகள் குறும்படத்திற்கான விருதை வென்றுள்ளது.

டி ஃபிலிம்ஸ் பேனரில் தேவயானி தயாரித்து, எழுதி, இயக்கியுள்ள 'கைக்குட்டை ராணி' திரைப்படத்திற்கு இசைஞானி இளையராஜா இசையமைக்க, பிரபல எடிட்டர் பி. லெனின் படத்தொகுப்பை கையாண்டுள்ளார். ராஜன் மிர்யாலா ஒளிப்பதிவையும், லட்சுமி நாராயாணன் ஏ.எஸ். ஒலி வடிவமைப்பையும் கையாண்டுள்ளனர்.



சுமார் இருபது நிமிடங்கள் ஓடும் இந்த குறும்படம் குழந்தைகளின் உணர்வுகளை திரையில் சொல்கிறது. தாயை இழந்த, தந்தை வெளியூரில் பணிபுரியும் ஒரு பெண் குழந்தை எத்தகைய சிக்கல்களை சந்திக்கிறது என்பதை உணர்ச்சிப்பூர்வமாக இப்படம் வெளிப்படுத்தியுள்ளது.

'கைக்குட்டை ராணி' குறும்படத்தை பார்த்த 17வது ஜெய்ப்பூர் சர்வதேச திரைப்பட விழா நடுவர் குழுவினர் குழந்தைகளுக்கான சிறந்த குறும்படத்திற்கான விருதுக்கு இதை தேர்ந்தெடுத்திருப்பதே ாடு தேவயானி மற்றும் குழுவினரை வெகுவாக பாராட்டினர்.

இது குறித்து மகிழ்ச்சி தெரிவித்த தேவயானி, "எத்தனையோ படங்களில் நான் நடித்திருந்த போதிலும், முதன்முறையாக நான் இயக்கிய குறும்படம் சர்வதேச□ அளவில் விருது பெறுவது மிகுந்த மகிழ்ச்சியையும் பெருமையையும் அளிக்கிறது. இதில் பங்காற்றியுள்ள மூத்த கலைஞர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றி. இதர சர்வதேச திரைப்பட விழாக்களுக்கும் இப்படத்தை கொண்டு செல்லும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோம்," என்றார்.

'கைக்குட்டை ராணி' குறும்படத்தில் நிஹாரிகா வி.கே. மற்றும் நவீன் என் முக்கிய வேடங்களில் நடித்துள்ளனர். சவுண்ட் எஃபெக்ட்ஸ் வடிவமைப்பு: சி., சேது, டிஐ கலரிஸ்ட்: ஆன்டனி பேபின் ஏ. திரைப்படத்தை சர்வதேச திரைப்பட விழாக்களுக்கு கொண்டு செல்லும் பணியை உலக சினிமா பாஸ்கரன் ஏற்றுள்ளார்.



# "இந்தியாவை மஞ்சளுக்கான உலகளாவிய மையமாக மாற்றுதல்" குறித்த ஐ.சி.ஆர்.ஐ.இ.ஆர்-ஆம்வே அறிக்கை வெளியீடு

### மஞ்சள் உற்பத்தியை உறுதிப்படுத்தவும், விவசாயிகளுக்கு அதிகாரம் அளிக்கவும் இந்தியாவுக்கு இலக்கு வைக்கப்பட்ட தலையீடுகள் தேவை: ஐ.சி.ஆர்.ஐ.இ.ஆர்-ஆம்வே அறிக்கை

## 2030 ஆம் ஆண்டுக்குள் மஞ்சள் ஏற்றுமதியை 1 பில்லியன் அமெரிக்க டாலர்களாக உயர்த்துவதை இந்தியா நோக்கமாகக் கொண்டுள்ளது

சென்னை, 21 ஜனவரி 2025: தேசிய மஞ்சள் வாரியம் தொடங்கப்பட்ட ஒரு நாள் கழித்து, சர்வதேச பொருளாதார உறவுகளுக்கான இந்திய கவுன்சில் (ஐ.சி.ஆர்.ஐ.இ.ஆர்) மற்றும் ஆம்வே இந்தியா எண்டர்பிரைசஸ் பிரைவேட் லிமிடெட், "இந்தியாவை மஞ்சளுக்கான உலகளாவிய மையமாக மாற்றுதல்" என்ற தலைப்பில் ஒரு விரிவான கூட்டு அறிக்கையை இன்று வெளியிட்டன, இது மஞ்சள் விவசாயிகள் எதிர்கொள்ளும் அழுத்தமான சவால்களை எதிர்கொண்டது மற்றும் உலகளாவிய மஞ்சள் சந்தையில் இந்தியாவின் நிலையை மேம்படுத்துவதற்கான ஒரு மூலோபாய வரைபடத்தை வழங்குகிறது. நாட்டின் முக்கிய மஞ்சள் மையங்களில் ஒன்றான வடக்கு தெலுங்கானாவின் நிஜாமாபாத்தில் வாரியத்தின் அலுவலகத்தை மத்திய வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சர் பியூஷ் கோயல் செவ்வாய்க்கிழமை முறையாக திறந்து வைத்தார். புதிய வாரியம் 2030 க்குள் மஞ்சள் ஏற்றுமதியை ஹிஷிஞ் 1 பில்லியன் அமெரிக்க டாலர்களாக உயர்த்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. 2020 ஆம் ஆண்டில் 58.2 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புள்ள உலகளாவிய மஞ்சள் சந்தை, 2028 ஆம் ஆண்டில் 16.1 சதவீத சிஏஜிஆர் இல் வளரும் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில், இந்திய மஞ்சள் விவசாயிகள் ஏற்ற இறக்கமான விலைகள், வரையறுக்கப்பட்ட சந்தை அணுகல் மற்றும் அறுவடைக்குப் பிந்தைய உள்கட்டமைப்பு போன்ற தடைகளை எதிர்கொள்கின்றனர் என்பதை ஐ.சி.ஆர்.ஐ.இ.ஆர்-ஆம்வே அறிக்கை எடுத்துக்காட்டுகிறது. 2023-24 ஆம் ஆண்டில் 1,041,730 மெட்ரிக் டன் உற்பத்தி எதிர்பார்க்கப்படும் 297,460 ஹெக்டேரில் இந்திய மஞ்சள் பயிரிட்ட போதிலும், உற்பத்தியை உறுதிப்படுத்துவதற்கும் விவசாயிகளுக்கு அதிகாரம் அளிப்பதற்கும் இலக்கு வைக்கப்பட்ட தலையீடுகளின் தேவை உள்ளது.

விவசாயிகளின் வலிகள் மற்றும் சவால்களை சுட்டிக்காட்டும் அதே வேளையில், முன்னோக்கி செல்வதற்கான வழியையும் அறிக்கை பரிந்துரைக்கிறது. கண்டுபிடிப்புகளின்படி, மூன்றாம் தரப்பு சான்றளிக்கப்பட்ட கரிம விவசாயிகளுக்கு சிறந்த விலையைப் பெற உதவுகிறது, ஆனால் அது விலை உயர்ந்தது, மேலும் மானியம் இல்லை. எனவே, மூன்றாம் தரப்பு கரிம நிறுவனங்களுக்கு மானியம், ஒழுங்குமுறை அமைப்புகளை ஒழுங்குபடுத்துதல் மற்றும் ஏற்றுமதியை மேம்படுத்த உதவும் ஒழுங்குமுறை ஒத்துழைப்புக்கான பரஸ்பர அங்கீகார ஒப்பந்தங்களில் கையெழுத்திடுதல் ஆகியவற்றை அறிக்கை பரிந்துரைக்கிறது குறைந்த அதிகபட்ச எச்சம் அளவுகளுடன் (எம்.ஆர்.எல்) உயர் குர்குமின் (5 சதவீதத்திற்கும் அதிகமான) மஞ்சளின் உலகளாவிய தேவையில் 10 சதவீதத்தை மட்டுமே இந்தியா வழங்க முடியும் என்றும் அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது. எனவே, உயர் குர்குமின் வகையை உருவாக்க ஆர்&டி தேவை, இதுபோன்ற வகைகள் உலகளாவிய தளங்களில் சந்தைப்படுத்தப்பட வேண்டும், ஆறு ஜிஐ தயாரிப்புகளுடன், வர்த்தக ஒப்பந்தங்களில் ஜிஐ விவாதங்கள் முக்கியம் என்று அது கூறியது. "இந்தியாவில் 30 க்கும் மேற்பட்ட மஞ்சள் வகைகள் உள்ளன, மேலும் ஜி.ஐ தயாரிப்புகளுக்கு வாய்ப்பு உள்ளது. 5 சதவீதத்திற்கு மேல் உள்ள தயாரிப்புகளில் ஜி.ஐ.யைப் பாதுகாப்பதில் கவனம் செலுத்த வேண்டும்" என்று அறிக்கை வலியுறுத்தியது.

டாக்டர் அர்பிதா முகர்ஜி, டாக்டர் சவிக் தத்தா, செல்வி எஷானா முகர்ஜி, செல்வி கேதகி கெய்க்வாட், திருமதி திரிஷாலி கண்ணா மற்றும் திருமதி நந்தினி சென் ஆகியோரால் இணைந்து எழுதப்பட்ட இந்த அறிக்கை, மஞ்சள் உற்பத்தி, மதிப்பு கூட்டல் மற்றும் ஏற்றுமதியில் இந்தியாவை உலகளாவிய தலைவராக

நிலைநிறுத்துவதற்கான உத்திகளை எடுத்துக்காட்டுகிறது.

ஐ.சி.ஆர்.ஐ.இ.ஆர் இயக்குநரும் தலைமை நிர்வாகியுமான டாக்டர் தீபக் மிஸ்ராவின் வரவேற்புரை மற்றும் இந்திய அரசின் நிதி ஆயோக் உறுப்பினர் திரு ரமேஷ் சந்த் ஆகியோர் சிறப்புரையாற்றி நிகழ்ச்சி தொடங்கியது.

சர்வதேச பொருளாதார உறவுகளுக்கான இந்திய ஆராய்ச்சி கவுன்சிலின் (ஐ.சி.ஆர்.ஐ.இ.ஆர்) இயக்குநர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி டாக்டர் தீபக் மிஸ்ரா தனது வரவேற்புரையில், "2030 ஆம் ஆண்டில் இந்தியாவின் மஞ்சள் ஏற்றுமதி 1 பில்லியன் அமெரிக்க டாலர்களை எட்டும் என்று வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சகம் கணித்துள்ளது. தேசிய மஞ்சள் வாரியத்தையும் அரசு நிறுவியுள்ளது. இந்த சூழலில் உலகளாவிய மஞ்சள் உற்பத்தியாளர் மற்றும் ஏற்றுமதியாளராக இந்தியா தனது நிலையை எவ்வாறு வலுப்படுத்த முடியும் என்பதற்கான இலக்கு பரிந்துரைகளை எங்கள் அறிக்கை செய்கிறது.

ஆய்வின் நோக்கங்களை எடுத்துரைத்த டாக்டர் அர்பிதா முகர்ஜி, "இந்த அறிக்கையின் நோக்கம் தற்போதைய போக்குகள் மற்றும் முன்னேற்றங்களை முன்வைப்பது, இந்தியாவில் மஞ்சள் மற்றும் மஞ்சள் தயாரிப்புகளின் வளர்ச்சி மற்றும் வளர்ச்சியை மையமாகக் கொண்டிருப்பதும், உலகளாவிய மஞ்சள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி மையமாக இந்தியாவின் நிலையை வலுப்படுத்துவதும் ஆகும்"

அறிக்கையின் முக்கிய நுண்ணறிவுகளை எடுத்துக்காட்டிய ஆசிரியர், உற்பத்தி நடைமுறைகளை மேம்படுத்துதல், ஏற்றுமதி சேனல்களை வலுப்படுத்துதல் மற்றும் மதிப்பு கூட்டப்பட்ட தயாரிப்புகளை ஊக்குவிப்பதன் மூலம் அதன் வளமான மஞ்சள் பாரம்பரியத்தை மேம்படுத்துவதற்கான இந்தியாவின் தனித்துவமான வாய்ப்பை வலியுறுத்தினார். இந்த விரிவான ஆய்வை மேற்கொள்ள ஆம்வே இந்தியா ஆதரவு அளித்தது. தனது நிறைவுரையில், ஆம்வே இந்தியாவின் நிர்வாக இயக்குநர் திரு. ரஜ்னீஷ் சோப்ரா கூறுகையில், "ஐ.சி.ஆர்.ஐ.இ.ஆர் இன் 'இந்தியாவை மஞ்சளுக்கான உலகளாவிய மையமாக மாற்றுதல்' என்ற அறிக்கை, விவசாயிகள், விவசாய உற்பத்தியாளர் அமைப்புகள், நிறுவனங்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்களின் நுண்ணறிவுகளை உன்னிப்பாகப் படம்பிடித்து, மஞ்சள் தொழில்துறையில் தற்போதைய நிலப்பரப்பு மற்றும் எதிர்கால வாய்ப்புகள் பற்றிய விரிவான பகுப்பாய்வை வழங்குகிறது. உணவுப் பாதுகாப்பை ஊட்டச்சத்து பாதுகாப்புடன் இணைப்பதன் மூலமும், மஞ்சளை ஊட்டச்சத்து மருந்தாகப் பயன்படுத்துவதை பல்வகைப்படுத்துவதன் மூலமும், இந்த அறிக்கை இந்தியாவின் ஏற்றுமதியை அதிகரிப்பதற்கும்,

இந்தியாவை மஞ்சளுக்கான உலகளாவிய மையமாக மாற்றுவதற்கான அரசாங்கத்தின் பார்வையை அடைவதற்கும் கணிசமாக பங்களிக்க முடியும். விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கவும், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு பயனளிக்கவும் நாட்டில் மதிப்புக் கூட்டலை மேம்படுத்துவது குறித்து இந்த அறிக்கை கவனம் செலுத்துகிறது. 2047 ஆம் ஆண்டுக்குள் இந்தியா வளர்ந்த நாடாக மாற வேண்டும் என்ற தொலைநோக்கு பார்வையுடன் இணைந்து, இந்தத் துறையின் திறனை கட்டவிழ்த்து விடுவதற்கான பரிந்துரைகளை இது வழங்குகிறது. வேலைவாய்ப்புகளை உருவாக்கவும், விவசாயிகள் மற்றும் எம்.எஸ்.எம்.இ.களை உலகளாவிய மதிப்புச் சங்கிலியின் ஒரு பகுதியாக மாற்றவும் இந்தத் துறை பெரும் ஆற்றலைக் கொண்டுள்ளது. இந்த ஆய்வு இரண்டாம் நிலை தரவு, தகவல் பகுப்பாய்வு மற்றும் முதன்மை கணக்கெடுப்பு

ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது மற்றும் "மேக் இன் இந்தியா" மற்றும் ஏற்றுமதிக்கான மதிப்பு கூட்டப்பட்ட தயாரிப்புகளில் கவனம் செலுத்துகிறது. வெளியீட்டைத் தொடர்ந்து "மஞ்சள் மதிப்பு கூட்டப்பட்ட தயாரிப்புகளில் இந்தியாவின் தலைமையைப் பாதுகாத்தல்" என்ற தலைப்பில் ஈர்க்கக்கூடிய குழு விவாதம் நடைபெற்றது. குழு விவாதத்தை பிரைமஸ் பார்ட்னர்ஸின் நிலைத்தன்மை மற்றும் விவசாய நடைமுறையின் எம்.டி மற்றும் தலைவர் திரு ராமகிருஷ்ணன் எம் நெறிப்படுத்தினார். வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை தோட்டக்கலை ஆணையர் டாக்டர் பிரபாத் குமார் மற்றும் உலக வர்த்தக அமைப்பின் முன்னாள் இந்திய தூதர் டாக்டர் ஜெயந்த் தாஸ்குப்தா ஆகியோர் சிறப்புரையாற்றினர். இந்த அமர்வில் வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறையின் முதன்மை பொருளாதார ஆலோசகர் திரு தேவஜித் கவுண்ட், டெல்லி பல்கலைக்கழகத்தின் வீட்டு பொருளாதார நிறுவனத்தின் பேராசிரியர் (ஓய்வு) டாக்டர் சீமா பூரி; டாக்டர் சவிக் தத்தா, உதவி பேராசிரியர், இந்திரபிரஸ்தா தகவல் தொழில்நுட்ப நிறுவனம் (ஐ.ஐ.ஐ.டி), டெல்லி; விராட் பஹ்ரி, இந்திய வர்த்தக மேம்பாட்டு கவுன்சிலின் (டிபிசிஐ) மேம்பட்ட வர்த்தக ஆராய்ச்சி மையத்தின் இணை இயக்குநர் திரு. மதிப்புக் கூட்டலை மேம்படுத்துதல், தரத்தை உறுதி செய்தல் மற்றும் அதன் பொருளாதார திறனை அதிகரிக்க சர்வதேச ஒத்துழைப்புகளை ஊக்குவித்தல் ஆகியவற்றின் மூலம் மஞ்சளில் இந்தியாவின் உலகளாவிய தலைமையை வலுப்படுத்துவதற்கான உத்திகள் குறித்து இந்த விவாதம் மையம் கொண்டிருந்தது.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

# பருவம் தவறி பெய்த கனமழையினால் டெல்டா மாவட்டங்களில் அறுவடைக்கு தயாராக இருந்த நெற்பயிர்கள் அழுகி சேதம்!

## பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ. 35 ஆயிரம் நிவாரணம் வழங்கிட தமிழக அரசுக்கு சிபிஐ (எம்) வலியுறுத்தல்!!

சென்னை, 21 ஜனவரி 2025: காவிரி டெல்டா மாவட்டங்களில், நேற்று பருவம் தவறி பெய்த கனமழையின் காரணமாக அறுவடைக்கு தயாராக இருந்த நெற்பயிர்கள் நீரில் மூழ்கி அழுகிப்போயுள்ளது. குறிப்பாக, மயிலாடுதுறை, நாகப்பட்டினம், தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் அறுவடைக்கு தயாராக இருந்த 1 லட்சம் ஏக்கர் நெற்பயிர்களும், ஊடுபயிராக பயிரிடப்பட்ட உளுந்து, பாசி பயிர்களும் நீரில் மூழ்கி சேதம் அடைந்துள்ளன. இதனால் விவசாயிகள் தங்களது ஒட்டுமொத்த வாழ்வாதாரத்தையும் இழந்து நிர்க்கதியான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

எனவே, தமிழ்நாடு அரசு, மழை வெள்ள பாதிப்படைந்த பகுதிகளை உடனடியாக பார்வையிட்டு கணக்கிடுவதுடன், பாதிக்கப்பட்ட நெற்பயிர்களுக்கு ஏக்கருக்கு ரூ. 35 ஆயிரமும், பிற பயிர்களுக்கு அதன் பாதிப்புகளுக்கு ஏற்றவாறு தமிழ்நாடு அரசு இழப்பீடு வழங்கிட வேண்டுமென மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்துகிறது.

மேலும், நேரடி நெல்கொள்முதல் நிலையத்தில் நெல் 17 சதம் ஈரப்பதம் இருந்தால் எடுப்பது என்ற வழக்கத்தை மாற்றி 22 சதம் வரை உயர்த்தி நெல்கொள்முதல் செய்திட வேண்டுமென்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தமிழக அரசை வலியுறுத்துகிறது.



# கோமியம் மனிதர்கள் குடிப்பதற்கு உகந்ததல்ல ஐ ஐ டி இயக்குநர் காமகோடி போன்றவர்கள் அறியாமல் இருப்பது மிகுந்த வியப்பை தருகிறது - கு. செல்வப்பெருந்தகை

சென்னை, 21 ஜனவரி 2025: சென்னை மேற்கு மாம்பலத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்ற சென்னை ஐ.ஐ.டி. இயக்குநர் காமகோடி, பசுவின் கோமியத்தில் ஏராளமான மருத்துவ குணங்கள் உள்ளதோடு, பாக்டீரியா, பூஞ்சை, செரிமான கோளாறு உள்ளிட்ட பல உடல்நல பாதிப்புகளை எதிர்க்க சிறந்த மருத்துவ குணத்தை கொண்டுள்ளதால் அதை அருந்த

வேண்டும் என்று நிகழ்த்திய உரை கடுமையான சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ளது. மிகுந்த புகழ் பெற்ற இந்திய தொழில்நுட்பக் கழகத்தின் இயக்குநர் அறிவியல் ரீதியாக சிந்திக்காமல் பிற்போக்குத்தனமான, மூடநம்பிக்கையின் அடிப்படையில் பேசியிருப்பதை வன்மையாக கண்டிக்கிறேன்.

இந்திய கால்நடை ஆராய்ச்சி நிறுவனம் பசுக்கள் மற்றும் எருமைகளின் சிறுநீரை ஆராய்ச்சி செய்ததில் கோமியம் மனிதர்கள் குடிப்பதற்கு உகந்ததல்ல என தெரிவித்துள்ளது. இதை மனிதர்கள் அருந்தினால் பல மோசமான நோய்கள் ஏற்படும் என எச்சரித்துள்ளதை காமகோடி போன்றவர்கள் அறியாமல் இருப்பது மிகுந்த வியப்பை தருகிறது.

வலதுசாரி அமைப்புகளை சேர்ந்தவர்கள் கூறுவதை வழிமொழிந்து காமகோடி பேசியிருக்கிறார் என்றுதான் நினைக்கத் தோன்றுகிறது. அறிவியல்பூர்வமாக கோமியம் குடிப்பதற்கு உகந்ததில்லை என உறுதியாக நம்பப்படுகிற நிலையில் அதற்கு விரோதமாக அறிவியல் நிறுவனத்தின் இயக்குநரே பேசியிருப்பது எவராலும் ஏற்றுக் கொள்ள முடியாது. இத்தகைய பிற்போக்கு சிந்தனை கொண்ட ஒருவர் ஐ.ஐ.டி. இயக்குநராக இருப்பதற்கு தகுதியற்றவர். இவர் ஏற்கனவே பல்வேறு சர்ச்சைக்குரிய செயல்பாடுகளில் ஈடுபட்டவர் என்பதால் இவரைப் போன்றவர்கள் இப்பொறுப்பில் நீடிப்பது அங்கே படிக்கிற மாணவர்களின் எதிர்காலத்திற்கே உகந்ததல்ல. எனவே, இத்தகைய கருத்துகளின் மூலம் கல்வி நிலையங்களை காவி மயமாக்குவதை அனுமதிக்க முடியாது.





# ஹமாஸ் வாக்குறுதிகளை நிறைவேற்றும் வரை போர் தொடரும்: இஸ்ரேல் அறிவிப்பு

சென்னை, 21 ஜனவரி 2025: ஹமாஸ் வாக்குறுதிகளை நிறைவேற்றும் வரை போர் தொடரும் என இஸ்ரேல் ராணுவம் அறிவித்துள்ளது.

இஸ்ரேல் ஹமாஸ் பயங்கரவாதிகள் இடையேயான போர் நிறுத்த ஒப்பந்தம் இன்று காலை முதல் அமலுக்கு வருகிறது. இந்த ஒப்பந்தத்தின்படி, 33 பிணைக்கைதிகளை விடுவிக்க ஹமாஸ் பயங்கரவாதிகள் முடிவு செய்துள்ள நிலையில், அதற்கு ஈடாக, இஸ்ரேல் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள 770 பாலஸ்தீனியர்கள் விடுதலையாகின்றனர் என தகவல் வெளியாகி இருந்தன. இது தொடர்பாக, இஸ்ரேல் ராணுவ செய்தித் தொடர்பாளர் ரியர் அட்மிரல் டேனியல் ஹகாரி கூறியதாவது: போர் நிறுத்தம் அமலுக்கு வராது. காசா மீதான தாக்குதல் தொடரும். ஹமாஸ் பயங்கரவாத அமைப்புடன் போர்நிறுத்தம் இன்னும் நடைமுறைக்கு வரவில்லை, ஏனெனில் விடுவிக்கப்பட வேண்டிய பிணைக்கைதிகளின் பட்டியலை ஹமாஸ் பயங்கரவாத குழு வழங்கவில்லை. இஸ்ரேல் பிரதமரின் உத்தரவுகளின்படி, ஹமாஸ் அதன் வாக்குறுதிகளை நிறைவேற்றும் வரை போர் நிறுத்தம் நடைமுறைக்கு வராது.



# பயணிகளிடம் கொள்ளையடிக்கும் ஆம்னி பேருந்துகள் துணை போகும் அரசுக்கு அன்புமணி கண்டனம்

சென்னை, 21 ஜனவரி 2025 : பயணிகளை கொள்ளையடிக்கின்றன ஆம்னி பேருந்துகளின் கட்டணக் கொள்ளையை தடுப்பதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்காமல் குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருக்கிறது திராவிட மாடல் அரசு. கட்டணக் கொள்ளைக்கு தி.மு.க. அரசு துணைபோவது கண்டிக்கத்தக்கது என பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.







இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

பொங்கல் திருநாளைக் கொண்டாடுவதற்காக சொந்த ஊர்களுக்குச் சென்று திரும்பும் மக்களிடம் தனியார் ஆம்னி பேருந்துகள் வரலாறு காணாத கட்டணக்கொள்ளையை நடத்தி வருகின்றன. பொங்கல் திருநாளுக்கு சொந்த ஊருக்கு செல்வதற்காக வசூலிக்கப்பட்டக் கட்டணத்தை விட மிக அதிகமான கட்டணம் சென்னைக்கு திரும்பி வருவதற்காக வசூலிக்கப்படும் நிலையில், இந்தக் கட்டணக் கொள்ளையை தடுப்பதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்காமல் குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருக்கிறது திராவிட மாடல் அரசு. கட்டணக் கொள்ளைக்கு தி.மு.க. அரசு துணை போவது கண்டிக்கத்தக்கது.

மதுரையிலிருந்து சென்னைக்கு அதிகபட்சமாக ரூ.3,950 கட்டணம் நிர்ணயிக்கப்படுள்ளது. நெல்லையிலிருந்து சென்னைக்கு ரூ.4,500, கோவையிலிருந்து சென்னைக்கு ரூ.5 ஆயிரம், நாகர்கோயிலில் இருந்து ரூ.3,899 கட்டணம் வசூலிக்கப்படுவதாக ஆம்னி பேருந்து முன்பதிவுக்கான இணையதளங்களில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இவை அனைத்தையும் விட குறைந்த தொலைவு கொண்ட திருச்சியிலிருந்து சென்னைக்கு வருவதற்கு ரூ.4 ஆயிரம் வரை கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இது இயல்பாக அரசுப் பேருந்துகளில் வசூலிக்கப்படும் கட்டணத்தை விட 6 முதல் 8 மடங்கு வரையிலும், தனியார் பேருந்துகளின் கட்டணத்தை விட 4 முதல் 6 மடங்கு வரையிலும் அதிகமாகும்.

யூனியார் பேருந்துகளில் அதிக கட்டணம் வசூலிக்கப்பட்டால் அதைத் தடுக்க வேண்டிய முதல் கடமை அரசுக்குத் தான் உள்ளது. ஆனால், அந்தக் கடமையை நிறைவேற்றுவதில் தமிழக அரசு முற்றிலுமாக தோல்வியடைந்து விட்டது. வழக்கம் போலவே பொங்கல் திருநாளுக்கு முன்பாக, அதிக கட்டணம் வசூலிக்கும் தனியார் பேருந்துகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஆவேசமான வசனங்களுடன் தமிழக அரசிடமிருந்து அறிக்கை வந்தது.

அதிக கட்டணம் வசூலிக்கும் தனியார் பேருந்துகள் குறித்து 1800 425 6151, 044-24749002, 044-26280445, 044-26281611 ஆகிய தொலைபேசி எண்களில் புகார் செய்யலாம் என தமிழக அரசு அறிவித்திருந்தது. ஆனால், இந்த எண்களை தொடர்பு கொண்டால், '' நீங்கள் தொடர்பு கொள்ளும் வாடிக்கையாளர் உங்கள் அழைப்பை ஏற்கும் நிலையில் இல்லை. அதனால் சிறிது நேரம் கழித்து தொடர்பு கொள்ளவும்'' என்று மட்டுமே பதில் கிடைத்ததாக ஆங்கில நாளிதழ் ஒன்றில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

போக்குவரத்து ஆணையர் ஷன்சொங்கம் ஜடாக்சிரு உள்ளிட்ட அதிகாரிகளை தொடர்பு கொள்ள மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் பயனளிக்கவில்லை என்றும் அந்த செய்தியில் கூறப்பட்டுள்ளது. ஆம்னி பேருந்துகளின் கட்டணக் கொள்ளையை தடுக்க வேண்டிய அரசும், அதிகாரிகளும் எந்த அளவுக்கு விழிப்புடன் செயல்படுகிறார்கள் என்பதற்கு இது தான் எடுத்துக்காட்டு ஆகும். கட்டணக் கொள்ளை குறித்து குற்றச்சாட்டுகள் எழுப்பப்பட்ட பிறகு தமிழக அரசின் சார்பில் கட்டணக் கொள்ளையில் ஈடுபட்ட பேருந்துகள் மீது அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக கண் துடைப்பு அறிவிப்பு வெளியாகும்.

கட்டணக் கொள்ளையில் ஈடுபட்ட பேருந்துகள் மீது எவ்வளவு அபராதம் வசூலிக்கப்பட்டிருக்கிறது என்று பார்த்தால் சராசரியாக ஒரு பேருந்துக்கு ரூ.1,750 மட்டும் தான் வசூலிக்கப்பட்டிருக்கும். ஒரு பயணியிடம் ரூ.5 ஆயிரம் என்ற அளவுக்கு கட்டணக் கொள்ளை நடத்தும் பேருந்துகளிடம் ரூ.1750 மட்டும் அபராதம் வசூலிக்கப்பட்டால், தனியார் பேருந்துகள் எவ்வாறு திருந்தும்? கட்டணக் கொள்ளையை எவ்வாறு தடுக்க முடியும்? கட்டணக் கொள்ளையில் ஈடுபடும் தனியார் பேருந்துகள் மீது நடவடிக்கை எடுக்காமல், கட்டணக் கொள்ளைக்கு திமுக அரசு துணை போவது ஏன்?

தமிழக அரசின் பணி என்பது மக்களின் நலன்களை காப்பது தானே தவிர, தனியார் பேருந்துகளின் நலன்களைக் காப்பது அல்ல. இதை உணர்ந்து கட்டணக் கொள்ளையில் ஈடுபடும் தனியார் பேருந்துகள் மீது தமிழக அரசு கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இது தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றம் பல முறை அளித்தத் தீர்ப்பை செயல்படுத்தும் வகையில் ஆம்னி பேருந்துகளுக்கான கட்டணத்தை தமிழக அரசே நிர்ணயிக்க வேண்டும். இவ்வாறு அன்புமணி ராமதாஸ் கூறியுள்ளார்.

# திருப்பதியில் போலி ரூ.300 தரிசன டிக்கெட் விற்ற மோசடி கும்பல் கைது

சென்னை, 21 ஜனவரி 2025 : திருப்பதியில் ரூ.300 போலி டிக்கெட்டுகளை போட்டோஷாப் மூலம் தயார் செய்து, டிக்கெட் கிடைக்காத பக்தர்களுக்கு விற்று மோசடியில் ஈடுபட்ட 5 பேர் கும்பல் பிடிபட்டுள்ளது.





திருப்பதி ஏழுமலையான் கோயிலில் 300 ரூபாய் தரிசன டிக்கெட்டுகளை ஸ்கேன் செய்யும் பணியில் லட்சுமிபதி என்ற ஊழியர் ஈடுபட்டு வந்துள்ளார். இவருடன் மறைமுகமாக கூட்டு சேர்ந்த மணிகண்டா, ஜெகதீஷ், சசி, பானுபிரகாஷ் ஆகியோர் பக்தர்கள் கொண்டு செல்லும் 300 ரூபாய் டிக்கெட்டுகளை, போலியாக போட்டோஷாப் மூலம் தயார் செய்துள்ளனர்.

மேலும் திருப்பதி சிறப்பு தரிசனத்துக்கு, டிக்கெட் கிடைக்காமல் தவிக்கும் பக்தர்களை அடையாளம் கண்டு அவர்களிடம் மோசடியில் ஈடுபட்டு வந்துள்ளனர்.

பிடிபட்ட 5 பேர் கைது - அவ்வாறு கடந்த 14ஆம் தேதி பக்தர்கள் சிலரிடம் இவர்கள் கைவரிசை காட்டியபோது, சந்தேகத்தின் அடிப்படையில் பக்தர்களின் டிக்கெட்டுகளை வாங்கி தேவஸ்தான விஜிலென்ஸ் அதிகாரிகள் சோதனை செய்தனர். அப்போது, அவர்களிடம் இருப்பது போலி டிக்கெட்டுகள் என்பதும், அந்த டிக்கெட்டுகளை மணிகண்டா, ஜெகதீஷ், சசி, பானு பிரகாஷ் ஆகியோர் கொடுத்து அனுப்பியதும், அவ்வாறு வருபவர்களின் டிக்கெட்டுகளை லட்சுமிபதி ஸ்கேன் செய்யாமல் அனுப்பியதும் தெரியவந்தது. அதனைத் தொடர்ந்து, போலி தரிசன டிக்கெட் விற்பனை செய்த கும்பலை, திருமலை திருப்பதி தேவஸ்தான போலீசாரிடம் விஜிலென்ஸ் அதிகாரிகள் ஒப்படைத்தனர்.

# மத்திய அரசு போதிய நிதி ஒதுக்காததால் மாநில அரசுக்கு கடன் சுமை

## தமிழ்நாட்டில் நிதி நிலைமை கட்டுக்குள் உள்ளது: எடப்பாடிக்கு அமைச்சர் தங்கம் தென்னரசு பதில்




சென்னை, 21 ஜனவரி 2025: தமிழக அரசின் நிதி நிலைமை கட்டுக்குள் உள்ளது. மத்திய அரசு போதிய நிதி ஒதுக்காததால் மாநில அரசுக்கு கடன் சுமை அதிகரித்துள்ளது, இருப்பினும் நிதிக் குழு பரிந்துரையின் வரம்பை மீறாமலேயே கடன் பெற்றுள்ளோம் என்று நிதியமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார்.

"தமிழக அரசு திவாலாகிறது" என அண்ணா தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி விமர்சித்திருந்த நிலையில் அமைச்சர் தங்கம் தென்னரசு இவ்வாறு தெரிவித்துள்ளார்.

விருதுநகரில் இன்று செய்தியாளர்களை சந்தித்து அமைச்சர் தங்கம் தென்னரசு கூறியதாவது: தமிழ்நாடு அரசு திவாலாகிறது என எடப்பாடி பழனிசாமி கூறியது அடிப்படை ஆதாரமற்ற குற்றச்சாட்டு. அரசின் நிதி நிலைமை குறித்த எடப்பாடி பழனிசாமியின் குற்றச்சாட்டு வேடிக்கையாக உள்ளது. நிதி மேலாண்மையில் தமிழக அரசு சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

மெட்ரோ ரெயில் திட்டத்துக்கு மத்திய அரசு போதிய நிதி ஒதுக்கவில்லை. ரூ.26 ஆயிரம் கோடி நிதியை தமிழக அரசே ஒதுக்கியது. பிரதமர் வீடு வழங்கும் திட்டத்துக்கு தமிழக அரசே கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்து வருகிறது.

இவ்வாறாக மத்திய அரசு போதிய நிதி ஒதுக்காததாலேயே மாநில அரசுக்கு கடன் சுமை அதிகரித்துள்ளது. இருப்பினும் தமிழகத்தின் நிதி நிலைமை கட்டுக்குள் உள்ளது. நிதி நிலைமையை கட்டுக்குள் வைக்க தேவையான பல்வேறு நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறோம். ஒவ்வொரு நிதியாண்டும் நிதிக்குழு நிர்ணயம் செய்த அளவைவிட குறைவாகவே கடன் பெற்றுள்ளோம்.

2021 - 22 நிதியாண்டில் 28.7% அளவுக்கு கடன் வாங்கலாம் என நிதிக்குழு பரிந்துரை செய்த நிலையில், 27.01% அளவுக்கே கடன் வாங்கப்பட்டுள்ளது.

பாஜக ஆளும் மாநிலங்களுக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 4 தென் மாநிலங்களுக்கும் சேர்த்தே ரூ.27,000 கோடியே ஒதுக்கப்பட்டுள்ளது. அண்ணா தி.மு.க. ஆட்சியில் ஏற்பட்ட நிதிச் சுமையையும் நாங்கள்தான் சரி செய்கிறோம்.

இவ்வாறு அமைச்சர் கூறினார்.

பரந்தூர் விமான நிலையம்: பொருளாதார வளர்ச்சிக்கு அவசியம்

பரந்தூர் விமான நிலையம் குறித்த கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர் தங்கம் தென்னரசு, "விமான நிலையங்களை உருவாக்குவது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அவசியமானது. தற்போது உள்ள சென்னை விமான நிலையம் மிகச் சிறிய ஏக்கர் பரப்பளவில் உள்ளது. தொழில் வர்த்தக கட்டமைப்பை உறுதி செய்ய பரந்தூர் விமான நிலையம் உருவாக்கப்படுகிறது.

விமான நிலையத்தை எதிர்த்துப் போராடும் பரந்தூர் மக்களை யார் வேண்டுமானாலும் சந்திக்கலாம். மக்களின் குறைகளை விஜய் கேட்டு அரசிடம் கூறினால் அதனை சரி செய்ய பரிசீலிப்போம் என்றார்.

# சென்னை ஆவடி அருகே பயங்கரம் அண்ணன் - தம்பி சரமாரியாக வெட்டிக் கொலை



சென்னை, 21 ஜனவரி 2025: ஆவடி அருகே அடுத்தடுத்து அண்ணன் - தம்பி சரமாரியாக வெட்டிக்கொலை செய்யப்பட்டனர்.

ஆவடியை அடுத்த பட்டாபிராம் அருகே உள்ள ஆயில்சேரி பஜனை கோவில் தெருவை சேர்ந்தவர் ரெட்டைமலை சீனிவாசன் (வயது 27). இவருக்கு திருமணமாகி மனைவி மற்றும் ஒரு பெண் குழந்தை உள்ளது. இவரது தம்பி ஸ்டாலின் (வயது 24). இவர்கள் 2 பேர் மீதும் போலீஸ் நிலையங்களில் பல்வேறு குற்ற வழக்குகள் உள்ளதாக கூறப்படுகிறது.

நேற்று மாலை ஸ்டாலின், ஆயில்சேரி மெயின் ரோடு ஜங்ஷனில் வந்து கொண்டிருந்தார். அப்போது அங்கு வந்த மர்ம கும்பல் கண்ணிமைக்கும் நேரத்தில் பெரிய வீச்சரிவாளால் ஸ்டாலினை சரமாரியாக வெட்டினர். இதில் படுகாயம் அடைந்த ஸ்டாலின், சம்பவ இடத்திலேயே ரத்த வெள்ளத்தில் பரிதாபமாக உயிரிழந்தார். இதனை கண்டதும், அந்த வழியாக வந்த பொதுமக்கள் அலறி அடித்து ஓடினர். மர்மநபர்கள் ஸ்டாலினை வெட்டிக்கொலை செய்த காட்சிகள் அங்குள்ள கண்காணிப்பு கேமராவில் பதிவாகி உள்ளது.

இதுகுறித்து தகவல் கிடைத்ததும் பட்டாபிராம் சரக போலீஸ் உதவி கமிஷனர் சுரேஷ்குமார், இன்ஸ்பெக்டர் ஜெகநாதன் மற்றும் போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று விசாரணை மேற்கொண்டனர். கொலையான ஸ்டாலின் உடலை பிரேத பரிசோதனைக்காக சென்னை கீழ்ப்பாக்கம் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்துவிட்டு, போலீசார் அங்கு நின்று விசாரித்து கொண்டிருந்தனர்.

அப்போது அதே பகுதியில் இருந்து சுமார் 100 மீட்டர் தூரத்தில் ஆயில்சேரி தனலட்சுமி நகர் அருகே உள்ள மாந்தோப்பில் ரெட்டைமலை சீனிவாசனும் படுகொலை செய்யப்பட்டு இருப்பதாக போலீசாருக்கு தகவல் வந்தது. இதையடுத்து இரவு சுமார் 8.30 மணியளவில் அங்கிருந்த போலீசார், மாந்தோப்புக்குள் சென்று இருட்டில் தேடி பார்த்தனர்.

மாந்தோப்புக்குள் உள்ள புதரில் ரெட்டைமலை சீனிவாசன் அரிவாளால் சரமாரியாக வெட்டி கொலை செய்யப்பட்டு கிடப்பது தெரிந்தது. ஆனால் ரெட்டைமலை சீனிவாசன் உடல் கிடந்த இடம் ஆவடி போலீஸ் நிலைய எல்லைக்கு உட்பட்டது என்பதால் இதுகுறித்து ஆவடி போலீஸ் இன்ஸ்பெக்டர் கிருஷ்ணமூர்த்தி வழக்குப்பதிவு செய்து இரட்டை மலை சீனிவாசன் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்.

ஒரே நாளில், ஒரே நேரத்தில் வெவ்வேறு இடங்களில் அண்ணன், தம்பி இருவரும் அடுத்தடுத்து வெட்டிக்கொலை செய்யப்பட்ட சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பையும், பொதுமக்கள் மத்தியில் அச்சத்தையும் ஏற்படுத்தியது.

ஸ்டாலின் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக பட்டாபிராம் போலீசாரும், ரெட்டைமலை சீனிவாசன் காலை தொடர்பாக ஆவடி போலீசாரும் இரு வழக்குகள் பதிவு செய்து இருவரையும் வெட்டிய மர்ம கும்பல் யார்? உள்ளூர் நபர்களா? அல்லது வெளியாட்களா? முன்விரோதம் காரணமாக வெட்டி படுகொலை செய்யப்பட்டனரா? தொழில் போட்டி காரணமா? என பல்வேறு கோணங்களில் விசாரித்து வருகின்றனர்.

ஆவடி போலீஸ் கமிஷனர் சங்கர் உத்தரவின் பேரில் தனிப்படை அமைக்கப்பட்டு குற்றவாளிகளை தீவிரமாக தேடிவருகின்றனர்.

# இந்தியாவில் பேபிஷாப் தொடங்கப்படுகிறது: 50 ஆண்டுகால உலகளாவிய நிபுணத்துவத்தை குடும்பங்களுக்குக் கொண்டுவருகிறது




சென்னை, 21 ஜனவரி 2025: புகழ்பெற்ற துபாயை தளமாகக் கொண்ட லேண்ட்மார்க் குழுமத்தின் ஒரு பகுதியும், குழந்தைகளுக்கான அத்தியாவசியப் பொருட்களில் நம்பகமான உலகளாவிய தலைவருமான பேபிஷாப், சென்னையின் எக்ஸ்பிரஸ் அவென்யூ மாலில் அதன் முதன்மைக் கடையைத் தொடங்குவதன் மூலம் இந்திய சந்தையில் அதிகாரப்பூர்வமாக நுழைந்துள்ளது. 50 ஆண்டுகளுக்கும் மேலான நிபுணத்துவத்துடன், பேபிஷாப் 14 நாடுகளில் 250+ கடைகளை இயக்குகிறது, உலகளவில் 10 கோடிக்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு சேவை செய்கிறது. இந்த மைல்கல் இந்தியாவில் பேபிஷாப்பின் பயணத்தின் தொடக்கத்தைக் குறிக்கிறது, இது இந்திய பெற்றோருக்கு நம்பிக்கை, தரம் மற்றும் கவனிப்பின் பாரம்பரியத்தைக் கொண்டுவருகிறது. புகழ்பெற்ற இந்திய நடிகை சோஹா அலி கான் கொண்டாட்டத்தில் தனது நட்சத்திர சக்தியைச் சேர்த்ததன் மூலம் இந்த வெளியீட்டு நிகழ்வு மேலும் உயர்த்தப்பட்டது.

பேபிஷாப் கடைகள் பெற்றோருக்கான ஒரே இடமாக வடிவமைக்கப்பட்டுள்ளன, புதிதாகப் பிறந்த குழந்தைகள் முதல் 10 வயது வரையிலான குழந்தைகளுக்கு உணவளிக்கின்றன. அதன் அனைத்து கடைகளிலும், பேபிஷாப் குழந்தைகளுக்கான அத்தியாவசியப் பொருட்கள், குழந்தைகளுக்கான ஃபேஷன், பயண உபகரணங்கள், நர்சரி தளபாடங்கள் மற்றும் பொம்மைகள் ஆகியவற்றின் சிந்தனையுடன் தேர்ந்தெடுக்கப்பட்ட வரம்பை வழங்குகிறது. உலகளாவிய போக்குகளை உள்ளூர் பொருத்தத்துடன் இணைத்து, பேபிஷாப் நவீன குடும்பங்களுடன் எதிரொலிக்கும் தயாரிப்புகளை வழங்குகிறது, அதே நேரத்தில் தடையற்ற மற்றும் சுவாரஸ்யமான ஷாப்பிங் அனுபவத்தை வழங்குகிறது.

"பேபிஷாப்பிற்கு இந்தியா ஒரு அற்புதமான புதிய அத்தியாயத்தை பிரதிநிதித்துவப்படுத்துகிறது, மேலும் எங்கள் நம்பகமான பிராண்டை இந்த துடிப்பான சந்தைக்குக் கொண்டுவருவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்," என்று பேபிஷாப்பின் தலைமை நிர்வாக அதிகாரி ரூபன் சண்முகராஜா கூறினார். "ஐந்து தசாப்தங்களுக்கும் மேலாக, பேபிஷாப் 14 நாடுகளில் உள்ள பெற்றோருக்கு ஆதரவளித்து, குழந்தைகளை வளர்ப்பதில் உள்ள மகிழ்ச்சிகளையும் சவால்களையும் கடந்து செல்ல உதவுகிறது. இப்போது, இந்திய குடும்பங்களுக்கு இந்த நம்பிக்கை மற்றும் நிபுணத்துவத்தின் பாரம்பரியத்தை கொண்டு வருவதில் நாங்கள் பெருமை கொள்கிறோம். பெற்றோர் வளர்ப்பு என்பது முக்கியமான தேர்வுகள் மற்றும் அர்த்தமுள்ள தருணங்கள் நிறைந்த ஒரு பயணமாகும், மேலும் அதை எளிமையாகவும், வசதியாகவும், அதிக பலனளிப்பதாகவும் மாற்றுவதில் நம்பகமான கூட்டாளியாக இருப்பதே எங்கள் குறிக்கோள்."

# முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 470.9% வரிக்குப் பிந்தைய இலாப வளர்ச்சியுடன் க்யு3எஃப்ஒய்25 – ல் சிறப்பான வருவாயை ஈட்டியிருக்கும் நெட்லிங்க்ஸ் லிமிடெட்




சென்னை, 21 ஜனவரி 2025 : இணைய சேவைகள், வலையமைப்பு மேலாண்மை, தரவு மையம் மற்றும் இணை அமைவிடச் சேவைகள் மற்றும் எண்டர்பிரைஸ் மெயிலிங் தீர்வுகள் உட்பட, வலையமைப்பு தீர்வுகளின் விரிவான தொகுப்பை நெட்லிங்க்ஸ் லிமிடெட் வழங்கி வருகிறது. இதன் பிரதான வருவாய், பிசினஸ் தகவல் தொழில்நுட்ப சேவைகளிலிருந்து கிடைக்கிறது; இதில், மென்பொருள் உருவாக்கம், ஆலோசனை வழங்கல் & பேக்கேஜ் செயலாக்கம் ஆகியவை உள்ளடங்கும். அத்துடன் உலகத்தரம் வாய்ந்த தொழில்நுட்பத்தின் மீது கட்டமைக்கப்பட்ட வலையமைப்பின் வழியாக பி2பி பிரத்யேக இன்டர்நெட் லீஸ்ட் லைன்களை (1:1) நெட்லிங்க்ஸ் லிமிடெட் வழங்கி வருகிறது.

தெலங்கானா மற்றும் ஆந்திரபிரதேஷ் மாநிலங்களில் பெருநிறுவனங்களுக்கு மேம்பட்ட நிர்வகிக்கப்படும் வலையமைப்பு சேவைகளை இந்நிறுவனம் அளிக்கிறது. 93 - க்கும் அதிகமான அமைவிடங்களில் நேரடி செயலிருப்பின் வழியாக நெட்லிங்க்ஸ் இயங்கி வருகிறது.

2025 ஜனவரி 17, வெள்ளிக்கிழமையன்று நடைபெற்ற இதன் இயக்குனர்கள் குழு கூட்டத்தில், 2024 டிசம்பர் 31 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் ஒன்பது மாதங்கள் காலஅளவிற்கான இதன் தணிக்கை செய்யப்படாத நிதிசார் முடிவுகள் அறிக்கைக்கு ஒப்புதல் வழங்கப்பட்டிருக்கிறது.

2024 டிசம்பர் 31 அன்று முடிவடைந்த மூன்றாவது காலாண்டின்போது, க்யு3எஃப்ஒய்24 - ல் ரூ.637.8 இலட்சமாக இருந்த இயக்க வருவாய், 896.3 இலட்சமாக வளர்ச்சியடைந்திருக்கிறது. க்யு3எஃப்ஒய்24-ல் 225.8 இலட்சமாக இருந்த இபிஐதிடிஏ, க்யு3எஃப்ஒய்25 - ல், ரூ.271.8 இலட்சமாக உயர்ந்திருக்கிறது. இபிஐதிடிஏ இலாப வரம்புகள், க்யு3எஃப்ஒய்24- ல் இருந்த 35.4% - லிருந்து, க்யு3எஃப்ஒய்25 ல் 510 பிபிஎஸ் குறைந்து, 30.3% ஆக பதிவாகியிருக்கிறது.

க்யு3எஃப்ஒய்24 - ல் ரூ.117.5 இலட்சமாக இருந்த வரிக்குப் பிந்தைய இலாபம் க்யு3எஃப்ஒய்25 ல் ரூ.671.0 இலட்சமாக, 470.9% வளர்ச்சியை பதிவு செய்திருக்கிறது. க்யு3எஃப்ஒய்25 - ல் வரிக்குப் பிந்தைய இலாபம், 5650 பிபிஎஸ் முன்னேற்றம் கண்டிருக்கிறது.

# வீரர்களுக்கு புதிய விதிமுறை: ரோகித் சர்மா பதில்

சென்னை, 21 ஜனவரி 2025 : இந்திய அணியின் அடுத்தடுத்து மோசமான தோல்வி எதிரொலியாக, வீரர்களுக்கு புதிய வழிகாட்டி நெறிமுறைகளை கொண்டு வர இந்திய கிரிக்கெட் வாரியம் முடிவு செய்துள்ளது. '45 நாட்களுக்கு மேலான வெளிநாட்டு சுற்றுப்பயணத்தின்போது வீரர்கள் 2 வாரத்திற்கு மேல் குடும்பத்தினரை உடன் வைத்துக் கொள்ள அனுமதி இல்லை. போட்டி நடக்கும் மைதானங்களுக்கு வீரர்கள் தனி வாகனத்தில் செல்லக்கூடாது. அணியினரோடு தான் பயணிக்க வேண்டும்.

ஒப்பந்தத்தில் உள்ள வீரர்கள் தனிப்பட்ட உதவியாளர்களை அழைத்து செல்லக்கூடாது. தொடரின் போது எந்த விளம்பர நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்ளக்கூடாது. உள்ளூர் கிரிக்கெட்டில் கட்டாயம் விளையாட வேண்டும்' உள்பட 10 விதமான விதிகள் வகுக்கப்பட்டுள்ளது.

புதிய விதிமுறை குறித்து இந்திய கேப்டன் ரோகித் சர்மாவிடம் நிருபர்கள் கேள்வி எழுப்பிய போது, 'இந்த விதிமுறைகளை உங்களிடம் சொன்னது யார்? இவை எல்லாம் அதிகாரபூர்வமாக வந்து விட்டதா? முதலில் அது வரட்டும். பிறகு பேசுகிறேன்.' என்று பதில்அளித்தார்.

மேலும் ரோகித் சர்மா கூறுகையில், 'தலைமை பயிற்சியாளர் கவுதம் கம்பீருடன் எந்த வித கருத்துவேறுபாடும் இல்லை. சூரு அணியாக நாம் என்ன செய்ய வேண்டும் என்பதில் இருவரும் தெளிவாக உள்ளோம். நாங்கள் களத்தில் இறங்கியதுடன் கேப்டனாக நான் செய்யும் விஷயங்கள் மீது நம்பிக்கை வைத்துள்ளார் என்றார்.